RBI / 2006-07 / 212

DGBA.CDD.H.9743/15.01.001/2006-07 டிசம்பர் 18, 2006

பொது மேலாளர்

அரசுக்கணக்குத் துறை – தலைமை அலுவலகம்
பாரத, இந்தூர், பாட்டியாலா, பிக்கனர் & ஜெய்பூர்
சௌராஷ்ட்ரா, திருவாங்கூர், ஹைதராபாத், மைசூர்,
ஸ்டேட் வங்கிகள்
அலாகபாத், பரோடா, மஹாராஸ்ட்ரா, கனரா, சென்ட்ரல்,
கார்ப்பரேஷன், தேனா, இந்தியன், இந்தியன் ஓவர்சீஸ்,
பஞ்சாப் நேஷனல், சிண்டிகேட், யூகோ, யூனியன்,
யூனைடட், விஜயா, ஐசிஐசிஐ வங்கிகள், பாங் ஆப் இந்தியா.

அன்புடையீர்,

**சிறப்புச் சேமிப்புத் திட்டம் 1975-2006 ஆம் ஆண்டு (ஜன்-டிச)க்கு வட்டி வழங்குதல்**

2005 ஆன் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் முடிய உள்ள காலத்திற்கு, வருடம் ஒன்றுக்கு 8% வட்டி, சிறப்புச் சேமிப்பு கணக்குகளுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று எங்கள் சுற்றறிக்கை RBI/2005/235-DGBA.CDD.15.01.001/H.8400/2005-06 நாள் டிசம்பர் 20, 2005 இல் அறிவுறுத்தியிருந்தோம்.

2. 2006 ஆம் ஆண்டிற்கும் வட்டி விகிதமாக அதே 8% மறு உத்தரவு வரும் வரை சிறப்புச் சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஒப்புதல் தந்துள்ளதால், சிறப்புச் சேமிப்புக்கணக்கு வைத்திருப்போருக்கு ‘கணக்கில் மட்டும்’ என்று கோடிட்ட காசோலைகளாக வட்டித் தொகை 8% கணக்கிடப்பட்டு வழங்கப்படவேண்டும்.

3. 2007 ஜனவரி முதல் வாரத்திலேயே 2006 ஆம் ஆண்டுக்கான் வட்டியினை அனைத்து அலுவலகங்களும் வழங்கிட வகையில் அனைவருக்கும் அறிவுறுத்த வேண்டும். 2003 டிசம்பர் 30 சுற்றறிக்கையில் சொல்லப்பட்ட அறிவுரைகள் மீண்டும் வலியுறுத்திச் சொல்லப்படுகிறது.

4. கிடைத்தமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

நம்பிக்கையுள்ள

இம்டியாஸ் அகமது

உதவிப்பொது மேலாளர்